பக்கங்கள் 13+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 31 புதன்கிழமை 14.05.2025 | அதிர்வு 284

## செம்மணிப் புதைகுழி: நாளை அகழ்வுப் பணி



யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில், மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதிகளில் அகழ்வுப் பணிகள் நாளை 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### தமிழின அழிப்பு நினைவுத் தூபி:

## கனேடியத் தூதுவரை நேரில் அழைத்து இலங்கை அரசாங்கம் கடும் ஆட்சேபனை



இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் மற்றும் கனடாவில் தமிழின அழிப்பு வுத்தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக்வோல்ஷிடம் தனது கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குக் கனடாத் தூதுவரை இன்று அழைத்து வெளிவிவகார 04

# தமிழினப் படுகொலையை சித்திரிக்கும் ஊர்திப் பவனி

### யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பம்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இருந்து இன்று புதன்கிழமை ஊர்திப் பவனி ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் தற்போது இடம்பெற்று 02

## அர்ச்சுனாவின் எம்.பி. பதவிக்கு எதிரான வழக்கு மீள ஜூன் 26 இல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தகுதி நீக்கம் செய்யக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்காக அழைக்கப்பட்டது.

இதன்போது வழக்காளி 03



## நுவரெலியாவில் மீண்டும் விபத்து!

*11 பேர் காயம்*

அண்மையில் பஸ் விபத்து இடம்பெற்ற நுவரெலியா கொத்மலை, கெரண்டி எல்ல பகுதிக்கு அருகில் மற்றுமொரு விபத்து சம்பவம் 03




## தமிழினப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நிலையில் இந்த ஊர்திப் பவனி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலைச் சென்றடையவுள்ளது.

“தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும்”, “தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும்” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டு இனப்படுகொலை நினைவுத்தூபி வைக்கப்பட்டுள்ள நிலையில், வீதிகளில் பயணித்த பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.






















# நூலகம் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதை யாழ். நூலக எரிப்பிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

“நூலகம் ஒன்று எவ்வளவு தூரத்துக்கு முக்கியமானது என்பதை நாங்கள் யாழ்ப்பாணம் நூலக எரிப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். இன்று உங்கள் பாடசாலைக்கு நன்கொடையாக அமைத்து வழங்கப்பட்டுள்ள நூலகத்தை உரிய வகையில் பயன்படுத்தி உங்கள் கிராமத்துக்கும் – சமூகத்துக்கும் நற்பெயரைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.” – என்று மாணவர்களிடம் கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்.

தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ‘மாணிக்கம் பூமணி ஞாபகார்த்த நூலகம்’ நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ந.வில்லியம் சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் சிறப்பு விருந்தினராகவும், தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி நூலகத்தை நாடாவெட்டி திறந்து வைத்து நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்தார். இதன் பின்னர் மேடை நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. இதன்போது ‘நெய்தலின் ஊற்று’ என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், நூலகத்தை கட்டுவதற்கு அன்பளிப்புச் செய்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர். 2021ஆம் ஆண்டு நூலகத்துக்கான அடிக்கல் நடுகை செய்யப்பட்டு அண்ணளவாக ஒரு கோடியே 55 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு தனது பிரதம விருந்தினர் உரையில் ஆளுநர் தெரிவித்ததாவது,

“இந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் கட்டுமானங்கள் எல்லாம் சீர்குலைந்துபோனது. இடப்பெயர்வுடன் பலர் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர். அப்படிச் சென்றவர்கள் இன்று எமது கிராமமும், சமூகமும் முன்னேற வேண்டும் என்பதற்காக இத்தகைய அளப்பெரிய உதவியைச் செய்திருக்கின்றார்கள்.

நான் எல்லா இடங்களிலும் ஒரு விடயத்தை திரும்பத் திரும்பக் கூறி வருகின்றேன். தலைமைத்துவம் எங்கு சரியாக இருக்கின்றதோ அந்த நிறுவனம் உயர்வை நோக்கிச் செல்லும். இது அரசாங்க நிறுவனத்துக்கு மாத்திரமல்ல தனியார் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

சில பாடசாலைகளின் அதிபர்கள் கணக்குகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையையுடன் நடந்துகொள்வதில்லை. அவ்வாறான அதிபர்களின் தலைமைத்துவக் குறைபாட்டால் அந்தப் பாடசாலைக்கு உதவிகளைச் செய்வதற்கு யாரும் முன்வருவதில்லை. அதனால் பாடசாலை பௌதீக ரீதியிலோ எந்தவொரு வகையிலுமோ வளர்ச்சியடைய முடியாத நிலைமை இருக்கின்றது. ஆனால் உங்கள் பாடசாலையின் அதிபர் மீது நம்பிக்கை வைத்து புலம்பெயர் சமூகம் பல உதவிகளைச் செய்திருக்கின்றது. இதைப் பயன்படுத்தி நீங்கள் முன்னேற வேண்டும்.

பாடசாலைக்கான வகுப்பறையின் தேவை உள்ளிட்ட சில விடயங்களை அதிபர் கோரியிருந்தார். உங்களின் கல்வித் தரம் உயர்வதற்கு எங்களாலான முயற்சிகளைச் செய்வோம். அடுத்த ஆண்டிலாவது உங்களின் கோரிக்கைளை நிறைவேற்றுவதற்கு நாம் நிச்சயம் முயற்சிப்போம்.” – என்றார்.

மேடை நிகழ்வுகளைத் தொடர்ந்து பாடசாலையில் புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடமும் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன.

கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் செம்மணி பகுதியில் உள்ள இந்து மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித என்புச் சிதி லங்கள் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டு அமைய, விடயத்தைப் பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி சம்பவ இடத்தில் நீதிவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். இதன்போது, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே, அங்கு அகழ்வாய்வு இடம்பெறவுள்ளன என்று தெரியவருகின்றது.

துறைசார் வல்லுநர் பேராசிரியர் சோமதேவ தலைமையில் இந்த ஆய்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

பேராசிரியர் சோமதேவ கடந்த மூன்றாம் திகதியன்று மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்ட இடத்தில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று புதன்கிழமை இடம்பெறுள்ளது. இந்த விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இன்று மாலை நுவரெலியா – கொழும்பு பிரதான வீதியில் வான் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சுவசெரிய அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

“பெரிய சத்தம் ஒன்று கேட்டு, வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தேன். மூன்று சிறுவர்கள் வாகனத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டதைப் பார்த்தேன்.” – என்று விபத்து நடந்த இடத்துக்கு அருகில் இருந்த 42 வயதுடைய நபர் தெரிவித்துள்ளார்.

## அர்ச்சுனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு சட்டத்தரணி மன்றில் ஆஜரான போதும் எதிராளியான நாடாளுமன்ற உறுப்பினர் சார்பு சட்டத்தரணி உயர் நீதிமன்றில் ஓர் வழக்கில் ஆஜராகுவதனால் மன்றில் அச்சமயம் முன்னிலையாக முடியவில்லை என அறிவித்தல் வழங்கியிருந்தார்.

இதனை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்று இந்த வழக்கை ஜூன் 26




# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதை மரணம் அதிகரிப்பு

## ஒரு வாரத்துக்குள் மட்டும் நால்வர் சாவு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் உயிரிழப்புகள் மீண்டும் சடுதியாக அதிகரித்து வருகின்றன என்று துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக அளவுக்கு அதிகமான போதைப்பொருள் பாவனையால் சிலர் உயிரிழந்துள்ளனர்.

அதீத போதைப்பொருளால் ஏற்படும் மரணங்கள் நீண்டகாலமாக இல்லாமலிருந்த நிலையில், அண்மைக்காலமாக மீண்டும் போதைப்பொருளால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துள்ளமை வேதனையான விடயமாகும்.

கடந்த ஒரு வாரத்துக்குள் மட்டும் நான்கு பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் 35 வயதுக்கு உட்பட்டவர்கள்.

அத்துடன், ஒவ்வொரு நாளும் போதைப்பொருள் பாவனையால் குறைந்தது மூவராவது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவர்களில் பலர் புனர்வாழ்வுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீண்டும் போதைப்பொருள்களின் பாவனை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது." - என்றனர்.

---

## கனேடியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் தனது கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார்

இது குறித்து அவர் சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

"ஆதாரமற்ற இனப்படுகொலை குற்றச்சாட்டுகள்,அது தொடர்பில் நினைவுத்தூபியை ஸ்தாபிப்பதற்கு அனுமதி வழங்கியமை குறித்த இலங்கை அரசின் கடும் ஆட்சேபனையை இலங்கைக்கானகனடாவின்உயர்ஸ்தானிகரிடம் இன்று வெளியிட்டேன்.

இலங்கையின் பன்முகதன்மை கொண்டே சமூகங்களிடையே தேசிய ஒற்றுமை தேசிய நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கான அரசின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு இது தடையாகவும் விளங்கும் சிக்கலை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தேன்." - என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரின்போது, இனப்படுகொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டானது, தேசிய அல்லது சர்வதேச அளவில் எந்தவொரு நம்பகமான அதிகாரியாலும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படாததுடன், அவை தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டுகள் என இலங்கை அரசு தொடர்ந்தும் வலியுறுத்துகின்றது. இந்தப் பொய்யான கதையை இலங்கை முற்றிலும் நிராகரிப்பதுடன், கனடாவுக்குள் தத்தமது தேர்தல் ஆதாயங்களுக்காக இவ்வாறு பிரசாரம் செய்யப்பட்டுள்ளதாக நம்புகின்றது.

2021, ஏப்ரலில், கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக எந்தவொரு கண்டுபிடிப்பையும் கனடா அரசு மேற்கொள்ளவில்லை என்பதை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. மேலதிகமாக, 2006 இல் கனடாவானது, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பொன்றாக அறிவித்ததுடன், 2024 ஜூனில் இவ்வகைப்படுத்தலை மீண்டும் உறுதிப்படுத்தியது.

கனடாவின் பிராம்ப்டன் நகரில் உள்ள சிங்க்வகௌசி பூங்காவில், தமிழ் இனப்படுகொலையைக் குறிக்குமுகமாக நினைவுச்சின்னமொன்றை நிர்மாணிப்பது குறித்து, இலங்கை அரசு பலமுறை தனது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளது. பிராம்ப்டன் நகர சபையின் இந்த வருந்தத்தக்க முயற்சியைத் தலையிட்டுத் தடுக்குமாறு, கனடாவின் மத்திய அரசை இலங்கை அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்தச் செயற்பாடு குறித்த முன்னெடுப்புக்களை, பரந்தளவிலான இலங்கை மற்றும் கனேடிய சமூகங்களுக்கு எதிரானதான ஒன்றாகவே இலங்கை அரசு கருதுகின்றது. இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்புவதும், கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நினைவுச்சின்னங்களை நிர்மாணிப்பதும் பொதுமக்களை தவறாக வழிநடத்துவது மட்டுமல்லாமல், அனைத்து சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் நீடித்த அமைதிக்கான இலங்கையின் அயராத முயற்சிகளைச் சீர்குலைப்பவையாக அமையும் என்று இலங்கை அரசு உறுதியாக நம்புகிறது.

இது தொடர்பில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் இன்று கனேடிய உயர் ஸ்தானிகரைச் சந்தித்து, ஆதாரமற்ற இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் மற்றும் அதனை அடிப்படையாகக்கொண்ட நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்புதல் தொடர்பில், இலங்கை அரசின் கடுமையான ஆட்சேபனைகளை மீண்டும் வலியுறுத்தியதுடன், இந்த முன்னெடுப்புக்கள் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமைக்கான அரசின் முயற்சிகளை சிக்கலாக்குவதுடன், அவற்றை பெரிதும் பலவீனப்படுத்துகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்." - என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உதாசீனம் ஏன்?

இலங்கையில் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், குறிப்பிடத்தக்க அளவில் குறைந்த வாக்குப் பதிவு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

339 உள்ளூராட்சி மன்றங்களில் 8,287 இடங்களுக்கு ஒரு கோடி 71 லட்சத்துக்கும் அதிகமான தகுதியுள்ள வாக்காளர்களும் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேட்பாளர்களும் போட்டியிட்ட போதிலும், ஒட்டுமொத்த வாக்காளர்கள் பங்கேற்பு 60 சதவீதத்திற்கும் சற்று அதிகமாகவே இருந்தது. கொழும்பு போன்ற நகர்ப்புற மையங்களில் வெறும் 57 சதவீத வாக்குப்பதிவு மட்டுமே பதிவாகியுள்ளது.

இது ஏன் என்ற கேள்வி சமூக ஆர்வலர்களால் இப்போது எழுப்பப்படுகின்றது.

இலங்கையின் தேர்தல் முறைமைகளிலேயே தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் தொடர்பில் பரந்த, பல தரப்பையும் அரவணைக்கின்ற ஏற்பாடுகள் கொண்ட ஒரே தேர்தலாக இந்த உள்ளூராட்சித் தேர்தலில் அமைந்துள்ளது. இளைஞர்களுக்கு, மகளிருக்கு எல்லாம் கட்டாயப்படுத்தப்பட்ட பங்களிப்பு அளிக்கும் விதத்தில் வேட்பு மனுக்களில் குறிப்பிடத்தக்க வீதத்தில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கைக்கு உரிய இளைஞர், யுவதிகளை மற்றும் மகளிரைக் கொண்டிராத வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டன.

இளைஞருக்கும் மகளிருக்கும் இத்தகைய அளவில் கட்டாய வாய்ப்பளிக்கப்பட்ட பின்னரும் இந்த தேர்தலில் இளம் சமூகம் அக்கறை காட்டவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த நிலைமையை மாற்றுவதற்கான ஏற்பாடு குறித்து தீவிரமாக சிந்திக்க வேண்டிய கட்டாயமும் உருவாகியுள்ளது.

தேர்தல்களை உள்ளூரில் அவரவர் பிரதேசங்களின் காலடிக்கு கொண்டு வந்த பின்னரும் - அந்தத் தேர்தல்களில் இளைஞர்களுக்கு கட்டாய பங்களிப்பை ஒழுங்கு விதிகள் மூலம் உறுதிப்படுத்திய பின்னரும் - வாக்களிப்பு மூலமான அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க விதத்தில் அமையவில்லை என்றால் இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

குறிப்பாக 2022 அறகலயா இயக்கத்தில்இளம்இலங்கையர்கள் ஆற்றிய முக்கிய பங்கைக் கருத்தில் கொண்டு நோக்குகையில், இப்படி தேர்தல்களில் இளம் சமூகம் புறக்கணிப்பைக் காட்டுவது விநோதமான - வித்தியாசமான - விசித்திரமான - போக்காகும்.

நாட்டில், தமக்குள், தாங்களாகவே ஒன்று திரண்டு, சட்டத்தையும் பாதுகாப்புத்தரப்பையும் சவாலுக்கு உட்படுத்தி, ஓர் ஆட்சி மாற்றத்தையே கட்டாயப்படுத்தி ஏற்படுத்தக் கூடிய ஈடுபாடு மிக்க இளைஞர்கள், தங்கள் கைகளில் வாக்குப் பலம் கிடைக்கின்ற போது அதை உதாசீனம் செய்து நடப்பது என்பது நம்ப முடியாத விடயம். ஆனால் அதுதான் நடப்பில் இடம்பெறுகிறது என்கின்றனர் விடயமறிந்த தரப்பினர். இதைமாற்றிஅமைப்பது எப்படி? விசேட கவனிப்பு கொடுத்து நோக்க வேண்டிய விவகாரம் இது!

# நீண்ட தூர போக்குவரத்து பஸ்களை விசேட பரிசோதனை செய்ய நடவடிக்கை

## பதில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்து

நீண்ட தூர சேவை பயணிகள் போக்குவரத்து பஸ்களை விசேட பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர், அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

தூர சேவை பயணிகள் பஸ்கள் விபத்துக்குள்ளாவது தினமும் அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு விசேட பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரவு நேரங்களில் தூர சேவை பயணிகள் பஸ்களை விசேட பரிசோதனைக்கு உட்படுத்தி, மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துதல், போதைப் பொருள் பயன்படுத்தி வாகனம் செலுத்துதல், கவனயீனமாகவும் ஆபத்தான முறையிலும் வாகனம் செலுத்துதல் ஆகிய போக்குவரத்து குற்றங்கள் தொடர்பாக சட்டத்தை அமுல்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பொருத்தமான இடங்களில் இரவு நேரங்களில் அதிகாரிகள் குழுக்களை நியமித்து, வீதியில் செல்லும் வாகனங்கள் மற்றும் பஸ்களை விசேட பரிசோதனைக்கு உட்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பொலிஸ் மோட்டார் சைக்கிள் ரோந்து பிரிவு அதிகாரிகள் மூலம் வீதியில் கவனயீனமாகப் பயணிக்கும் பஸ்களை பரிசோதனைக்கு உட்படுத்தி சட்டத்தை அமல்படுத்தவும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவுறுத்தியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



# அம்பாறை - மகியங்கனை வீதியில் வீதியை விட்டு விலகிய சொகுசு பஸ்!

அம்பாறை – மகியங்கனை வீதியில், மகியங்கனையின் வேவத்த பகுதியில் சொகுசு பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று (14) அதிகாலை 2.30 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தால் பஸ்ஸில் பயணித்த எவருக்கும் தெய்வாதீனமாகக் காயங்கள் ஏதுவும் ஏற்படவில்லை என்று மகியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.


குணம்ஸ் சூப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET

1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# இறம்பொடை விபத்தில் உயிழந்தோருக்கான இழப்பீட்டு நிதி பிரதேச செயலகங்களுக்கு!

கொத்மலை, இறம்பொடை பகுதியில் சமீபத்தில் ஏற்பட்ட பஸ் விபத்தில் உயிரிழுந்தவர்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து இழப்பீடு வழங்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தீர்மானித்துள்ளார்.

அதன்படி, சம்பந்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், விபத்தில் உயிரிழுந்த ஒவ்வொருவருக்காகவும் தலா ஒரு மில்லியன் ரூபா குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணம் விபத்தில் உயிரிழந்த 22 பேர் வசித்து வந்த திஸ்ஸமஹாராம, லுனுகம்வெஹெர, வெலிமட, ஹல்துமுல்ல, எல்ல, குண்டசாலை, பமுனகொட்டுவ, படுவஸ்நுவர மேற்கு, பொல்பிதிகம, வனாத்தவில்லுவ, சிலாபம், புத்தல, தனமல்வில, வெல்லவாய, கந்தளே மற்றும் ரம்பேவ ஆகிய பிரதேச செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த விபத்தில் சிக்கிய இளைஞர் ஒருவர் இன்று உயிரிழந்துள்ள நிலையில் 24 ஆக பலி எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

சுமார் 40 பேர் நாவலப்பிட்டி, கம்பளை மற்றும் நுவரெலியாவில் உள்ள ஆதார மருத்துவமனைகளிலும், பேராதனை மற்றும் கண்டியில் உள்ள போதனா மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கொத்மலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.








# ஆனையிறவு உப்பள ஊழியர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்!

## பல்வேறு பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர்

ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி கவனவீர்ப்புப் போராட்டத்தை இன்றைய தினம் (14) ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆனையிறவு உப்பளத்தில் தற்போதுள்ள பொது முகாமையாளர், முகாமைத்துவ பிரிவினர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட பலர் எம்மை பழிவாங்குவது போல் செயற்படுகின்றனர்.

எமக்கு உரிய வகையில் வேலைகளை வழங்குவதில்லை. எமக்கான மருத்துவ வசதிகள் உப்பளத்தில் இல்லை. குடி தண்ணீர் பிரச்சினை காணப்படுகிறது. குடி தண்ணீரை வெளியே உள்ள தாங்கியில் இருந்துதான் உள்ளே எடுத்துச்செல்ல வேண்டும்.

முற்பகல் 10 மணி ஆனதும் நாங்கள் எடுத்துச் செல்லும் குடிதண்ணீர் மட்டுமல்ல தாங்கியில் உள்ள குடி தண்ணீரும் மிகவும் சூடாகி காணப்படும். ஆகையால் நாங்கள் அதனை குடிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த மாதம் தொடங்கி இதுவரை எமக்கு 4 நாள்களே வேலை வழங்கப்பட்டது, 10 நாள்கள் வேலை இல்லாமலே இருக்கின்றோம். இதைவிட இந்த மாதம் வேலை செய்யாத ஊழியர்கள் கூட காணப்படுகின்றனர்.

மனிதவலு இருக்கும்போது இயந்திரவலுவை பயன்படுத்துகின்றனர். வேலை செய்யும் எமக்கு சீருடைகளோ, பாதுகாப்பு கவசங்களோ வழங்கப்படுவதில்லை.

ஒரு ஊழியர் உப்பளத்தில் வேலை செய்யும்போது இறந்தால்கூட எமது பணத்தில்தான் அவரது சடலத்தை கொண்டு செல்ல வேண்டும். அவரது கண்ணீர் அஞ்சலி பத்திரிகைகள் கூட எமது பணத்தில்தான் வெளியிட வேண்டுமே தவிர நிறுவனம் எமக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளையும் வழங்காது.

இந்த உப்பளத்தைத் திறந்து வைக்கும்போது 8 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதி வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார். ஆனால் எமக்குப் பின்னர் வழங்கப்பட்டது 800 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதியே.

அனைத்து ஊழியர்களுக்கும் ஒரே அளவான போனஸ் கொடுப்பனவே வழங்கப்பட வேண்டும் என்ற நடைமுறை காணப்படுகிறது. ஆனால் இங்கு எமது வரவைப் பார்த்து, மிகவும் குறைந்த போனஸ் தொகையே கொடுப்பார்கள்.

வேலைக்கு வராதது எமது பிழை அல்ல. எமக்குச் சுழற்சி முறையிலான வேலையையே வழங்குகின்றனர். ஆகையால் நாங்கள் எப்படி ஒழுங்காக வேலைக்கு வருவது? எமக்கான ஒரு தொழிற்சங்கத்தை இயங்க விடுவதில்லை.

ஊழியர்களின் நலனுக்காக யாராவது குரல் கொடுத்தால் அவரை பிடித்து அடித்து வெளியே துரத்துங்கள் என கூறுவார்கள். இது அரச நிறுவனம் போல் இல்லாது முதலாளித்துவத்துடன் கூடிய தனியார் நிறுவனம் போலவே செயற்படுகிறது.

ஒரு நாள் 5 ஊழியர்களின் உழைப்பு மட்டும் போதும், இங்கு வேலை செய்கின்ற அனைத்து ஊழியர்களின் ஒரு நாள் சம்பளத்தைக் கொடுப்பதற்கு அவ்வளவு இலாபம் ஈட்டும் உப்பளமாகவும், இலங்கையின் மிகவும் பெரிய உப்பளமாகவும் இந்த உப்பளம் காணப்படுகிறது.

ஊழியர்களின் நலனுக்காக யாராவது அதிகாரி இங்கு குரல் கொடுத்தால் உடனே அவரை இடமாற்றம் செய்கின்றனர். பல வருடங்கள் இங்கு பணியாற்றியவர்களை கூட மதிப்பதில்லை.

இங்கு பணிபுரியும் முகாமையாளர் உள்ளிட்ட பலர் உப்பு தொடர்பான அடிப்படை அறிவற்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஏற்கனவே இங்கு பணியாற்றியவர்களின் அனுபவங்களைக் கூட அவர்கள் கேட்பதில்லை. அப்படி கூறினாலும் அதனைத் தட்டிக்கழிக்கின்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற உப்பை ஹம்பாந்தோட்டை, மன்னார், புத்தளம் உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு சென்று அங்கு வைத்து பொதியிட்ட பின்னர் மீண்டும் எமது பகுதிகளுக்கு கொண்டுவந்து விநியோகம் செய்கின்றனர்.

இதனால் இரண்டு போக்குவரத்து செலவு காரணமாக உப்பின் விலையை அதிகரித்து விற்பனை செய்கின்றனர். எமது பகுதியில் விளையும் உப்பை இங்கேயே வைத்து பொதியிடக்கூடிய வசதி இருந்தும் ஏன் வெளி மாவட்டம் கொண்டு செல்ல வேண்டும்?

மழை பெய்தால் எம்மை வேலைக்கு வரவேண்டாம் எனக் கூறுகின்றனர். ஆனால் மழை பெய்தாலும் இங்கே செய்வதற்கு பல வேலைகள் உள்ளன.

ஒரு தொழிற்சாலைக்கு இலாபம் வரும்போது நாங்கள் வேலை செய்கின்றோம், அதுபோல அந்த அந்த தொழிற்சாலைக்கு நஷ்டம் ஏற்படும்போதும் அந்த தொழிற்சாலை அதனை தாங்கிக்கொண்டு எமக்கு வேலையை வழங்கத்தான் வேண்டும். ஆனால் இங்கே இவ்வாறான நடைமுறைகள் காணப்படுவதில்லை.

ரஜ உப்பு என்ற பெயரை மாற்றம் செய்து ஆனையிறவு உப்பு என்ற பெயரில் மாற்றியதாக கூறுகின்றனர். ஆனால் இதுவரை பொதி செய்த உப்பு பைகளில் ரஜ உப்பு என்றே காணப்படுகிறது.

ஆனையிறவு உப்பு என்ற பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. பெண் ஒருவர் தினமும் 65 அந்தர் (3250 கிலோ) உப்பு அள்ள வேண்டும் என கூறி அவர்களை மிகவும் கொடுமைப் படுத்துகின்றனர்.

இலாபத்தைப் பகிர்ந்து அளிப்பதாக அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் அதனை பகிர்ந்து வழங்குவதற்கு யாரும் தயாராக இல்லை, அந்த இலாபத்தை எமக்கு பகிர்ந்தளிக்கின்றனர் இல்லை.

இந்தக் கவனவீர்ப்பில் ஈடுபட்டபோது முகாமையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் எங்களைக் கதைப்பதற்கு உள்ளே அழைத்தனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உள்ளிட்ட ஊழியர்களும் உள்ளே சென்றோம். ஆனால் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

உள்ளே சென்று கலந்துரையாடிய போது அவர்கள் எங்களது பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளவில்லை. நாங்கள் மண்வெட்டி பிடி திருடினோம், உப்பு திருடினோம் என்று பொய்யான குற்றச்சாட்டு கூறுகின்றார்களே தவிர எமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதுபோல் தெரியவில்லை.

இது பார்ப்பதற்கு வெளியே ஒரு தேசிய உப்பளமாக காணப்பட்டாலும் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே இதற்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டும்.- என்றனர்.

# முன்பிணையில் விடுவிக்குமாறு கோரி நீதிமன்றை நாடியுள்ளார் அளுத்கமகே!



கடந்த அரசின் காலத்தின் போது தரமற்ற கரிம உரக் கப்பலை நாட்டுக்கு இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பாக லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் கைது செய்யப்படுவதற்கு முன்னர் முன்பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இன்று (14) கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அதன்படி, இந்த கோரிக்கை தொடர்பாக எதிர்வரும் 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவுக்குக் கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி அழைப்பாணை விடுத்துள்ளார்.




# டில்ஷி அம்ஷிகாவின் மரணம் தொடர்பில் ஆராய 10 பேர் அடங்கிய குழு நியமனம்!




கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி 6 வது மாடியில் இருந்து குதித்து உயிரிழந்த டில்ஷி அம்ஷிகா என்ற 16 வயது மாணவி மரணம் தொடர்பில் ஆராய 10 பேரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – கொட்டாஞ்சேனையில் கடந்த 29 ஆம் திகதி 16 வயதான மாணவி தவறான முடிவெடுத்து உயிரிழந்த சம்பவம் நாட்டில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியது.

உயிரை மாய்த்த மாணவி பம்பலப்பிட்டியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்த காலப் பகுதியில் அந்த பாடசாலையின் ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த சந்தேகநபரான ஆசிரியர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொட்டாஞ்சேனை சிறுமியின் மரணம் தொடர்பாகத் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரசபை தனி விசாரணையைத் தொடங்கியுள்ளது.

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த அதிகாரசபையின் தலைவர் பிரீத்தி இனோகா ரணசிங்க, இதற்காக பத்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.



# களுத்துறை தெற்கு கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ள டொல்பின்கள்

களுத்துறை தெற்கு கடற்கரையில் ஆறு டொல்பின்கள் கரை ஒதுங்கியுள்ளன.

கரையொதுங்கியுள்ள 6 டொல்பின்களும் ஏதோ விபத்துக்கு உள்ளாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது என்று வனவிலங்கு திணைக்களத்தின் கால்நடை வைத்தியப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், களுத்துறை கடற்கரை கொந்தளிப்பாக காணப்படுகிறது என்றும் உயிர்காப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.





### சொகுசு கார் ஒன்று மோதியதில்

# ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர் ஒருவர் உயிரிழப்பு!

பிலியந்தலை, மடபாத படகெத்தர பிரதேசத்தில் சொகுசு கார் ஒன்று மோதியதில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் பிலியந்தலை, தம்பே பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் என தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பாக காரை செலுத்திய பட்டய கணக்காளர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்தில் இறந்த பெண், வேலை முடிந்து படகெத்தர பகுதியில் வீதியின் வலது பக்கத்தில் இருந்து இடது பக்கமாக வீதியை கடக்கும் போது, மடபாத திசையில் இருந்து புவக்கஸ் சந்தி திசை நோக்கிச் சென்ற சொகுசு கார் அவர் மீது மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பலத்த காயமடைந்த பெண்ணைச் சந்தேக நபரான சாரதியே பிலியந்தலை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். சிறிது நேரத்தின் பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் கவனக்குறைவு மற்றும் பொறுப்பற்ற வகையில் வாகனம் செலுத்தியமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்றும் பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் அருகே கள்ளச்சாராயம் குடித்த 17 பேர் பலி



பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் அருகே கள்ளச்சாராயம் குடித்த 17 பேர் உயிரிழந்துள்ளனர். இதுதொடர்பாக 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமிர்தசரஸ் மாவட்டம் அமிர்தசரஸ் அருகே மஜிதியா பகுதியில் நேற்று முன்தினம் கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த கள்ளச்சாராயத்தை பங்கலி, படல்புரி, மராரி கலான், தெரேவால் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பலர் குடித்துள்ளனர்.


கள்ளச்சாராயம் குடித்த சிறிது நேரத்தில் பலர் சுருண்டு விழுந்து இறந்தனர். மொத்தம் 17 பேர் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்துள்ளனர்.

மேலும், கள்ளச்சாராயம் குடித்து பாதிப்புக்குள்ளான 6 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது, சாராயம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் எத்தனால் எனும் ரசாயனத்துக்கு பதிலாக ஒன்லைன் மூலம் வாங்கிய மெத்தனாலை கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்கள் அனைவரும் கூலித் தொழிலாளிகள் என்று தெரியவந்துள்ள நிலையில், இதற்கு காரணமான குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் என மாநில முதல்வர் பகவந்த் மான் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே கள்ளச்சாராயம் தயாரித்து விற்பனைச் செய்த முக்கிய சந்தேகநபரான பிரப்ஜித் சிங் மற்றும் அவரது கூட்டாளிகள் என மொத்தம் 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், கள்ளச்சாராயத்தை விநியோகித்த ஏராளமானோர் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கைகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



## இந்தியாவை விட்டு செல்லமாட்டேன்: தாய் வீடு என ரஷ்ய பெண் உருக்கம்

எல்லையில் பாகிஸ்தானுடன் போர்ப்பதற்றம் இருந்தபோதிலும் இந்தியாவை விட்டு செல்லமாட்டேன் என்று இந்தியாவில் வசிக்கும் ரஷ்யாவை சேர்ந்த பெண் உருக்கமாக பேசியுள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்தவர் போலினா அக்ரவால். நீண்ட ஆண்டுகளாக இந்தியாவில் தங்கியுள்ளார். அவர் தற்போ/ உத்தராகண்ட் மாநிலம் குர்கானில் வசித்து வருகிறார். இந்நிலையில் பாகிஸ்தானுடனான எல்லைப் பிரச்சினையில் இந்தியா எடுத்த நடவடிக்கை குறித்து பிரதமர் மோடியையும், இராணுவ வீரர்களையும் அவர் பாராட்டியுள்ளார். இதுதொடர்பாக அவர் பேசியுள்ள காணொலியை சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ளது. அது தற்போது வைரலாகியுள்ளது.

அந்த காணொலியில் அவர் பேசுகையில்,

“இந்தியா, பாகிஸ்தான் இடையே 4 நாள்களாக சண்டை நடந்தபோது, ரஷ்யாவிலுள்ள எனது பாட்டி ரஷ்யாவுக்கு, தாய்நாட்டுக்கு வந்துவிடுமாறு கூறினார். எது எனது தாய்வீடு? இதுதான் என்னுடைய வீடு. நான் இங்குதான் இருப்பேன் என்று அவரிடம் தெரிவித்துவிட்டேன்.

இந்திய இராணுவ வீரர்கள் இரவு பகலாக எல்லையில் காத்து நிற்கின்றனர். தேசத்துக்காக தங்களது உயிரை அர்ப்பணித்த இராணுவ வீரர்களுக்கு எனது வணக்கம். அவர்கள் எல்லையில் இரவு, பகலாக காவல் காப்பதால்தான், நாட்டு மக்கள் இங்கு இரவு நேரத்தில் நிம்மதியாக உறங்கமுடிகிறது.

ரஷ்ய நாடு கொடுத்த மிகவும் நவீனமான ஆயுதங்கள், இராணுவப் பாதுகாப்புச் சாதனங்களை இந்தியா வைத்துள்ளது. எதிரி நாட்டிலிருந்து பறந்து வரும் ட்ரோன்கள், ஜெட் விமானங்கள், போர் விமானங்கள் உள்ளிட்ட எதையும் சமாளிக்கும் திறனை இராணுவம் பெற்றுள்ளது.

பதற்றம் ஏற்பட்டபோது இந்திய இராணுவம் தயாராக இருந்ததைப் பாராட்டவேண்டும். சுயநலமில்லாமல் நாட்டுக்காகப் போரிடும் இராணுவ வீரர்கள் நாம் பாராட்டவேண்டும். இதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் துணிச்சலான முடிவெடுத்த பிரதமர் மோடியையும் பாராட்டுகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

## பொள்ளாச்சி பாலியல் வழக்கு தீர்ப்பு: த.வெ.க. தலைவர் விஜய் வரவேற்பு



பொள்ளாச்சி பாலியல் துஷ்பிரயோக குற்றவாளிகளுக்கு, சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டமை வரவேற்கத்தக்கது என த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் கல்லூரி மாணவிகள், இளம்பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, குற்றவாளிகளுக்குச் சாகும்வரை சிறைத் தண்டனை வழங்கி, கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கில், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சற்று ஆறுதல் அளிக்கும் விதமாக இந்தத் தீர்ப்பு இருக்கும் என நம்புகிறேன்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட அனைவரும் மனதைரியத்தோடு இந்த வழக்கை எதிர்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கும் வகையில் செயல்பட்டுள்ளனர். இதற்காக அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம். எனவே, குழந்தைகள், பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கத் தமிழக அரசு விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, 90 நாள்களுக்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கழகப் பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம்.

பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோக வழக்கு விசாரணையை நீண்ட காலமாக நடத்தி நீட்டிக்காமல், விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, 90 நாள்களுக்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இராணுவத்தில் நம் பெண்கள் வீர தீரத்துடன் சாதித்ததைக் கொண்டாடும் இக்காலத்தில், மகளிரின் பாதுகாப்பில் அரசு மட்டுமின்றி ஒவ்வொருவரும் அக்கறையுடன் செயல்பட்டு, பெண்கள் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்புக்கும் இனியாவது எவ்வித சமரசமுமின்றி உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.” என குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்கா, சீனாவை அதிர வைத்த இந்தியாவின் ‘ஆகாஷ்தீர்’ ஆயுதம்






இந்தியாவின் அதிநவீன வான் பாதுகாப்பு கவசமான “ஆகாஷ்தீர்“, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளை அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது.

கடந்த 7, 8, 9, 10 ஆகிய திகதிகளில் இந்தியா, பாகிஸ்தான் இடையே அதிதீவிர போர் நடைபெற்றது. இந்த போரில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக சீனாவும் துருக்கியும் நேரடியாக களம் இறங்கின. துருக்கியின் சார்பில் அதிநவீன பைகார் யிஹா 3 ரக ட்ரோன்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டன.

கடந்த சில நாள்களாக லடாக், காஷ்மீர், பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் எல்லைப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான துருக்கி ட்ரோன்கள் அலை, அலையாக வந்து தாக்குதல் நடத்த முயற்சி செய்தன. ஒரே நேரத்தில் சுமார் 1,000 இற்கும் மேற்பட்ட ட்ரோன்கள் வானில் பறந்தன. அனைத்து ட்ரோன்களையும் இந்திய இராணுவம் நடுவானில் சுட்டு வீழ்த்தியது.

இதேபோல சீனாவின் சார்பில் அதிநவீன பி.எல்.15 எல்.ஆர். ரக ஏவுகணைகள் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டன. இந்திய விமான படைத் தளங்களை குறிவைத்து சீன ஏவுகணைகள் அடுத்தடுத்து வீசப்பட்டன. இந்த ஏவுகணைகளையும் இந்திய இராணுவம் நடுவானில் வெற்றிகரமாக இடைமறித்து அழித்தது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து ஹமாஸ் தீவிரவாதிகள் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை வீசினர். இதனால் இஸ்ரேல் இராணுவத்தின் “அயர்ன் டோம்“ என்ற வான் பாதுகாப்பு கவசம் செயலிழந்து அந்த நாட்டில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன.

இதேபாணியில் பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவின் மீது ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான ட்ரோன்கள், ஏராளமான ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியது. ஆனால் இந்தியாவின் “ஆகாஷ்தீர்” என்ற வான் பாதுகாப்பு கவசம் அனைத்து ட்ரோன்கள், ஏவுகணைகளையும் நடுவானில் துவம்சம் செய்தது. இது அமெரிக்கா, சீனா, ரஷ்யா, துருக்கி உள்ளிட்ட நாடுகளை அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது.

மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி, வளர்ச்சி அமைப்பு டி.ஆர்.டி.ஓ மற்றும் பொதுத்துறை நிறுவனமான பாரத் எலெக்ட்ரானிஸ் லிமிடெட் இணைந்து செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் “ஆகாஷ்தீர்” வான் பாதுகாப்பு கவசத்தை உருவாக்கி உள்ளன.

ரேடார்கள், செயற்கைக்கோள்கள் அளிக்கும் தகவல்களின் அடிப்படையில் இந்திய வான் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் போர் விமானங்கள், ட்ரோன்கள், ஏவுகணைகளை “ஆகாஷ்தீர்“ வான் பாதுகாப்பு கவசம் கண்டறிகிறது. அடுத்த சில நொடிகளில் “ஆகாஷ்தீரின்” உத்தரவின்படி எஸ் 400, பரக் 8, ஆகாஷ் உள்ளிட்ட ஏவுகணைகள் சீறிப் பாய்ந்து எதிரிகளின் ட்ரோன்கள், ஏவுகணைகள், போர் விமானங்களை துல்லியமாக தாக்கி அழிக்கின்றன.

கடந்த சில நாள்கள் நடைபெற்ற போரின்போது பாகிஸ்தானின் ட்ரோன்களை ஆகாஷ் ஏவுகணைகளும், அந்த நாட்டின் போர் விமானங்கள், ஏவுகணைகளை எஸ் 400, பரக் 8 ரக ஏவுகணைகளும் நடுவானில் இடைமறித்து அழித்தன.

இந்தியாவின் “ஆகாஷ்தீர்” வான் பாதுகாப்பு கவசத்துக்கு இணையான தொழில்நுட்பம் அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளிடம்கூட இல்லை. இது அந்த நாடுகளை மிரள வைத்திருக்கிறது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ‘ஜி’ சின்னத்தை புதுப்பித்த கூகுள்

கூகுள் நிறுவனம் தனது ‘கூகுள் தேடல்’ செயலியில் உள்ள ‘ஜி’ சின்னத்தைப் புதுப்பித்துள்ளது.

கடந்த 10 வருடங்களில் முதன் முறையாக இவ்வாறு ‘ஜி’ சின்னத்தை புதுப்பித்துள்ளது.

ஐஃபோன் பயனர்கள் மற்றும் கூகுளின் பிக்சல் தொலைபேசி பயனர்களுக்கு தற்போது இந்த சின்னம் புதுப்பிக்கப்பட்ட வடிவில் காட்சியளிக்கிறது.

ஏனைய தொலைபேசிகளுக்கு விரைவில் புதுப்பிக்கப்பட்ட சின்னம் காட்சியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சிரியாவிற்கு எதிரான அனைத்து தடைகளையும் நீக்குகிறார் ட்ரம்ப்



அமெரிக்காவுக்கு, சவூதி அரேபியாவை விட வலுவானதொரு பங்காளி இல்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி, சிரியாவிற்கு எதிரான அனைத்துத் தடைகளையும் நீக்குவதாகவும் உறுதியளித்தார்.

சிறந்த வாய்ப்புடன் நாடு முன்னேற வேண்டிய நேரம் இது என்றும் கூறியுள்ளார்.

சவூதி அரேபியாவுக்கான ட்ரம்பினது விஜயத்தின் முதல் நாளில் அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் 142 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தநிலையில், ரியாத்திலிருந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய இரு நாடுகளுக்கும் பயணமாகவுள்ளார்.

# கனடா முரசு

பக்கங்கள் - 3

புதன்கிழமை 14/05/2025


## வெளியுறவுத்துறை அமைச்சராக அனிதா ஆனந்த் பதவியேற்பு



C2 ▶



# கனடா பொதுப்பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்றார் ஹரி ஆனந்த சங்கரி

கனடாவின் புதிய அமைச்சரவையில் பொதுபாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி பதவியேற்றுள்ளார்.

அண்மையில் கனடாவில் இடம்பெற்ற பொதுதேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சி வெற்றிபெற்ற நிலையில் புதிய அமைச்சரவை நியமனங்கள் செவ்வாய் கிழமை வழுங்கப்பட்டன.

இந்நிலையில் பொதுபாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹரி ஆனந்தசங்கரி முன்னதாக பல அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார்.

இலங்கைத் தமிழரான இவர் 2015 ஒக்டோபர் 19 இல் நடைபெற்ற கனேடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் இசுக்கார்பரோ-ரூச் பார்க் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதற்தடவையாக நாடாளுமன்றம் சென்றார்.

கனடாவில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் வன்முறைகளை தீர்த்து வைக்கும் வகையில், கனடாவில் இளைஞர்கள்சேவை நிலையமொன்றை அவர் ஆரம்பித்துள்ளார்.

கனடாவில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களிடம் காணப்படும் முரண்பாடுகளைதீர்ப்பதற்காக முன்னின்று செயற்படுபவராக ஹரி ஆனந்தசங்கரி அந்தக் காலங்களில் திகழ்ந்துள்ளார்.

மேலும், கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அமைப்பின் வளர்ச்சிக்காகவும் அவர் முன்னின்று செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

C2 ▶





# வெளியுறவுத்துறை அமைச்சராக அனிதா ஆனந்த் பதவியேற்பு

கனடாவின் புதிய வெளியுறவுத் துறை அமைச்சராக இந்திய வம்சா வளியைச் சேர்ந்த அனிதா ஆனந்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் நடந்து முடிந்த தேர் தல்களில் வெற்றி பெற்று ஆட்சிய மைக்கும் லிபரல் கட்சியின் தலை வரான மார்க் கார்னி, அமைச்சர வையில் சில முக்கிய மாற்றங் களைக் கொண்டுவந்துள்ளார்.

கனடாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த மெலானி ஜோலிக்கு பதிலாக, அனிதா ஆனந் துக்கு அந்த பதவி கையளிக்கப் பட்டுள்ளது.

அனிதா, புலம்பெயர்ந்தோரின் மகள் ஆவார். அனிதாவின் பெற் றோர் 1960 களின் துவக்கத்தில் இந் தியாவிலிருந்து கனடாவுக்கு புலம் பெயர்ந்தவர்கள் ஆவர்.

அனிதாவின் தாய் சரோஜ் டி ராம் பஞ்சாபைச் சேர்ந்தவர், தந்தை எஸ். வி. ஆனந்த் ஒரு தமிழர் என்பது குறிப் பிடத்தக்கது.

பல பட்டப்படிப்புகளை முடித்த அனிதா, சட்டம், கல்வி மற்றும் பொது சேவை துறைகளில் வலுவான தடம் பதித்தவர் ஆவார்.

அனிதாவின் கணவரான ஜான் ஒரு சட்டத்தரணியாக இருப்பதுடன் வணிக நிர்வாகியாகவும் உள்ளார். தம்பதியருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

அனிதா, ஏற்கனவே தேசிய பாது காப்புத்துறை, போக்குவரத்து, உள் நாட்டு வர்த்தகம் முதலான துறைக ளில் அமைச்சராகவும், கருவூல வாரி யத் தலைவராகவும் பதவிகள் வகித்த வர் ஆவார்.



**கனடா பொதுப்பாதுகாப்பு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“பொது பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்றதில் நான் மிகவும் பெரு மைப்படுகிறேன், பணிவுடன் உணர்கி றேன். டேவிட் மெக்கின்டியின் நல்ல பணிகளைக் கட்டியெழுப்ப நான் எதிர் நோக்குகிறேன்.

மேலும் நமது சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூல மும், வெறுப்பை எதிர்த்துப் போராடு வதன் மூலமும், நமது பாதுகாப்பு நிறு வனங்களை வலுப்படுத்துவதன் மூலமும் கனடியர்களுக்கு சேவை செய்ய நான் உறுதிபூண்டுள்ளேன்.” என ஹரி ஆனந்த சங்கரி தனது பதவியேற்பின்போது தெரிவித்துள் ளார்.



# போதைப் பொருள் விற்பனை செய்த இந்திய மாணவனுக்கு சிறைத்தண்டனை

கனடாவில் போதைப் பொருள் விற்பனை செய்த இந்திய மாணவனுக்கு 30 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த 26 வயதான மாணவன் மந்தீப் பந்தர், கனடாவில் மாணவர் விசாவில் வந்தவர், கோகைன் மற்றும் ஃபென்டனில் போன்ற போதை மாத்திரைகளை விற்பனை செய்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி குற்றச்சாட்டுக்களை மாணவன் நீதிமன்றில் ஒப்புக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022 ஆம் ஆண்டில், குறித்த இந்திய மாணவர் 30 கிராமுக்கும் மேற்பட்ட கோகைன் மற்றும் 10 கிராம் ஃபென்டனில் உடன் கைது செய்யப்பட்டார்.

அந்த நேரத்தில் பந்தர் மற்றும் மற்ற இருவரும் பொலிஸ் கண்காணிப்பில் இருந்தனர்.

அவர்கள் Kelowna மற்றும் Vernon பகுதிகளுக்கிடையே Dial-a-Dope போதைப்பொருள் விற்பனைக் குழுவை இயக்கியதாக சந்தேகிக்கப்படுகிறது.

பந்தரின் கைது பின்னர், அப்பார்ட்மெண்டில் நடந்த பொலிஸ் சோதனையில் போதைப்பொருள் களஞ்சியங்கள் கைப்பற்றப்பட்டன. சிறைத்தண்டனையின் பின்னர் மேற்படி இந்திய மாணவரை நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.




# கல்கரியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் கல்கரி நகரின் வடகிழக்கு பகுதியில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து, ஒரு தனிநபர் செலுத்திய வாகனம் மட்டுமே சம்பந்தப்பட்டதாகவும், திங்கள்கிழமை இரவு 10 மணியளவில் ஸ்டோனி ட்ரெயிலின் கிழக்கு வழித்தடத்தில், டீர்ஃபுட் ட்ரெயிலில் ஏற்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்பு குழுவினர் சம்பவ இடத்தை சென்றபோது, அந்த வாகனம் தீப்பிடித்து எரிந்திருந்தது. இதில் இருந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விபத்துக்குக் காரணமான சூழ்நிலைகள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.